மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

27.08.2022 சனிக்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

# சிறுவர்கள் பட்டினியுடன் தூக்கத்திற்குச் செல்கின்றனர்

இலங்கையில் பொருளாதார நெருக்கடி தொடர்ந்தும் சிக்கல் தருகின்ற நிலையில், வறிய, மிகவும் பாதிப்புக்குள்ளான சிறுமியரும், சிறுவருமே அதன் பாதிப்பை அனுபவிக்கின்றனர்.

துரித பொருளாதார வளர்ச்சி மற்றும் பெருகும் சுற்றுலாத்துறைக்காக பெயர் போன நாடான, இலங்கையானது, 1948 சுதந்திரத்திற்குப் பின்னரான மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடியை அனுபவிக்கின்றது. அத்தியாவசிய உணவுகளைப் பெற்றுக் கொள்ள முடியாமையால் பல குடும்பத்தினர் தமது வழக்கமான உணவைத் தவிர்த்து வருகின்றனர்.

சிறுவர்கள் பட்டினியுடன் தூக்கத்திற்குச் செல்கின்றனர். தீவிரமான ஊட்டச் சத்துக் குறைபாட்டின் தெற்காசியாவில் இரண்டாவது உயர் விகிதத்தைக் கொண்டுள்ள நாட்டில், எப்போது அவர்களுக்கான அடுத்த வேளை உணவு கிடைக்கும் என்பதில் உறுதியில்லை. இலங்கையில் சுமார் இரண்டில் ஒரு சிறுவருக்கு ஏதாவது ஒரு வடிவிலான அவசர கால உதவி தேவையாக இருக்கின்றது. இரண்டு வருடங்கள் தடைப்பட்ட கற்றல் நடவடிக்கையினால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள 4.8 மில்லியன் சிறுவர்களின் கல்வியானது, பாடசாலை வருகை தொடர்ந்தும் குறைவாக இருப்பதால் மேலும் பாதிப்புக்குள்ளாகும் ஆபத்தில் உள்ளது. சிறுவர்களின் பாடசாலை நடவடிக்கைகள் தற்போதுள்ள நெருக்கடியினால் பல்வேறு வழிகளில் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நெருக்கடிக்கு முன்பதாக அவர்கள் உட்கொண்ட சூடான மற்றும் ஊட்டச்சத்து மிக்க உணவு அவர்களுக்கு கிடைப்பதில்லை. அவர்களுக்குத் தேவையான அடிப்படையான கற்றல் உபகரணங்கள் இல்லை. ஆசிரியர்கள் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

உயர்ந்து செல்லும் பொருளாதார அழுத்தம் காரணமாக சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகம், சுரண்டல் மற்றும் வன்முறைச் சம்பவங்களின் அதிகரிப்பு தொடர்பான அதிக அறிக்கைகளை

02

# தேசியப் பட்டியல் வெற்றிடத்திற்கு ரஞ்சன்

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியலில் ஏற்படும் முதலாவது வெற்றிடத்தில் ரஞ்சன் ராமநாயக்க பாராளுமன்றத்திற்கு கொண்டுவரப்படுவார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். ஜனாதிபதியினால் மன்னிப்பு வழங்கப்பட்ட ரஞ்சன் ராமநாயக்க கலந்து கொண்ட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் கருத்து தெரிவித்த அவர், ரஞ்சனுக்கு ஓரளவு சுதந்திரம் கிடைத்துள்ளது. அவருக்கு ஜனநாயக உரிமைகள் இருந்திருக்க வேண்டும். அந்தச் சுதந்திரத்தை ரஞ்சன் ராமநாயக்கவுக்கு சகல அரசியல் உரிமைகளுடன் வழங்குமாறு ஜனாதிபதிக்கு நாங்கள் பரிந்துரைக்கின்றோம்.

# பாதாள உலகத்தை ஒடுக்கும் விசேட நடவடிக்கை ஆரம்பம்

பாதாள உலகத்தை ஒடுக்கும் விசேட நடவடிக்கை இன்று (27) முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார். அமைச்சர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. பொலிஸ் மா அதிபர், மேல் மற்றும் தென் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள், பயங்கரவாத விசாரணைப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் திணைக்களம், பொலிஸ் விசேட அதிரடிப் படை, பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவு உள்ளிட்ட புலனாய்வுத் திணைக்களத்தினர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டுள்ளனர்.

# முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகள் எதுவும் கோட்டாவிற்கு கிடைக்காது?

அரசியலமைப்பு ரீதியாக முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகள் எதுவும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு கிடைக்காது என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவித்துள்ளார். கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவிக் காலம் முடிந்து ஓய்வு பெற்ற ஜனாதிபதியல்ல, அவர் சேவையிலிருந்து விலகிய ஜனாதிபதி என முன்னாள் பிரதம நீதியரசர் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்வாறு சேவையில் இருந்து விலகிய ஜனாதிபதி ஒருவருக்கு அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள சலுகைகள் எதுவும் கிடையாது எனவும் அவர்

02

# ரஞ்சன் ராமநாயக்கவினால் தேர்தலில் போட்டியிட முடியாது

ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுதலையான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு 7 வருடங்களுக்கு தேர்தலில் போட்டியிட முடியாது என்று நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்தார். ரஞ்சன் ராமநாயக்கவுக்கு முழுமையான சுதந்திரம் கிடைக்கவில்லை என்றும் அவர் கூறினார். எந்தவொரு அரசியல்வாதியும் 06 மாதங்களுக்கும் மேலாக சிறையில் அடைக்கப்பட்டால், அவரது குடியுரிமை 07 வருடங்களுக்கு ரத்து செய்யப்படும். இருப்பினும், அரசியலமைப்பின் 34 (2) பிரிவின் கீழ் பொது

02

# மின் கட்டணம் திருத்தம் தகவல்களை கோருகிறது சர்வதேச நாணய நிதியம்

நாணயநிதியத்திற்கும் இடையிலான மற்றுமொரு சுற்று பேச்சுவார்த்தை நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது. ஜூம் தொழில்நுட்பத்தின் ஊடாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டதுடன் இருதரப்பும் சாதகமான கருத்துக்களை பரிமாறிக் கொண்டதாக ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது. மின் கட்டண திருத்தம் மற்றும் கலால் சட்டம் தொடர்பான இந்த கலந்துரையாடல்களுக்கு தேவையான மேலதிக தகவல்களை வழங்குமாறு சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் விடுத்த கோரிக்கைக்கு இணங்க, எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் தகவல்களை வழங்குவதற்கும் இணக்கம் காணப்பட்டது. சர்வதேச நாணய நிதியத்தின் நிதி ஆலோசகர்கள் மற்றும் சட்ட ஆலோசகர்களும் நேற்று கலந்துரையாடலில் கலந்துகொண்டதுடன், எதிர்வரும் புதன்கிழமை மற்றுமொரு சுற்று கலந்துரையாடலை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

# 03 நாட்களில் அனைத்து எரிபொருட்களின் மேலதிக இருப்புக்களை விநியோகம் செய்க

### எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர

எதிர்வரும் 03 நாட்களில் அனைத்து வகையான எரிபொருட்களின் மேலதிக இருப்புக்களை விநியோகிக்குமாறு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார். இது குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள அமைச்சர், எரிபொருள் விநியோகத்தை மீளாய்வு செய்ததன் பின்னர் நாடளாவிய ரீதியில் விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என சுட்டிக்காட்டியுள்ளார். தரையிறங்குவதில் ஏற்பட்ட தாமதம், விநியோகத்தில் ஏற்பட்ட தட்டுப்பாடு, எரிபொருள் நிரப்பு நிலையங்களின் பணம் செலுத்துவதில் தாமதம் போன்ற காரணங்களால் நீண்ட வரிசையில் நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர மேலும் தெரிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் இரண்டு நாட்களில் எரிபொருள் வரிசைகள் முறையாக குறையும் என அமைச்சர் தெரிவித்தார்.

# இலங்கை மீது விதிக்கப்பட்ட பயண ஆலோசனைகளை பல நாடுகள் தளர்த்தின

இலங்கைக்கு செல்லும் தமது நாட்டவர்களுக்காக கடுமையான பயண ஆலோசனையை விதித்திருந்த பிரான்ஸ் நோர்வே சுவிட்சர்லாந்து மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகள் அந்த கட்டுப்பாடுகளை தளர்த்தியுள்ளன. எரிபொருள் பற்றாக்குறை காரணமாக போக்குவரத்து, நிறுவனங்கள் மற்றும் அவசர சேவைகள் அனைத்தும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மருத்துவமனைகள் மற்றும் அம்பியூலன்ஸ்கள் சேவைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் என சுட்டிக்காட்டியுள்ளது.

# கோழிக்கறி, மீன் விலை குறைப்பு தொடர்பில் அடுத்த வாரம் தீர்மானம்

கோழிக்கறி மற்றும் மீனின் விலை குறைப்பு தொடர்பில் அடுத்த வாரம் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. வர்த்தக மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார். சந்தையில் கோழி இறைச்சியின் விலை மற்றும் அதற்கான விலை தொடர்பான தரவுகள் நுகர்வோர் விவகார அதிகாரசபையிடம் இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை சீமெந்து, கம்பி மற்றும் இரும்பு ஆகியவற்றின் விலைகளை குறைப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

## சிறுவர்கள் பட்டினியுடன்

காண்கின்றோம். இலங்கையில் ஏற்கனவே 10,000 இற்கும் அதிகமான சிறுவர்கள் நிறுவனம்சார் கட்டமைப்பின் பராமரிப்பில் இருக்கின்றனர். இதற்கான பிரதான காரணம் வறுமையாகும். சிறுவர்கள் வளர்வதற்கான மிகப் பொருத்தமான இடமாக அவை இருப்பதில்லை. ஏனெனில், அதில் குடும்ப உறவுக்கான சாத்தியம் இருப்பதில்லை. துரதிஷ்டவசமாக, தம்மால் பராமரிக்கவும், உணவளிக்கவும் முடியாத நிலையில் மேலும் பல குடும்பங்கள் தமது பிள்ளைகளை இந்த நிறுவனம்சார் கட்டமைப்புக்குள் சேர்ப்பதற்கு இந்த நெருக்கடி வழிவகுத்துள்ளது. தற்போதைய நிலை தொடருமாயின், இலங்கையில் சிறுவர்களுக்கான கடும் உழைப்பின் மூலம் பெறப்பட்ட நன்மைகளானது, சில சந்தர்ப்பங்களில் பழைய நிலைக்குச் செல்லும் அல்லது முழுமையாக அழிக்கப்படும் ஆபத்து நிலையில் உள்ளது. ஐம்பதிற்கும் மேற்பட்ட வருடங்களாக யுனிசெப் நிறுவனமானது இலங்கையில் செயற்பட்டு வருகின்றது. பங்காளர்களின் ஆதரவுடன் நாம், கற்றல் உபகரணங்களை வழங்குகின்றோம், முன்பள்ளி சிறுவர்களுக்கான உணவுகளை வழங்குகின்றோம் மற்றும் கர்ப்பிணித் தாய்மார் மற்றும் தாய்ப்பாலூட்டுபவர்களுக்கு மிக அவசியமான பணப் பரிமாற்றங்களை வழங்குகின்றோம். ஆனாலும், நெருக்கடி தொடர்வதனால், மேலும் தேவை உள்ளது.

நெருக்கடியைத் தீர்ப்பதற்கு நாடு முயற்சித்து வரும் நிலையில் தீர்வின் முக்கிய இடத்தில் சிறுவர்கள் வைக்கப்பட வேண்டிய தேவையுள்ளது. அனைத்து வயதுப் பிரிவுகளையும் சேர்ந்த சிறுமியர் மற்றும் சிறுவர்களுக்கான தொடர்ச்சியான கல்வி உறுதி செய்யப்படல் வேண்டும். அப்போது அவர்கள் தமது எதிர்காலத்திற்காக தயாராக முடியும் என்பதுடன், சிறுவர் தொழிலாளர், சுரண்டல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை ஆபத்திலிருந்து தம்மை காத்துக் கொள்ள முடியும். உயிர் ஆபத்துள்ள நோய்கள் மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டிற்கு எதிராக பெண்களையும், சிறுவர்களையும் பாதுகாப்பதற்கு மத்திய மற்றும் சமுதாயம்சார் சுகாதார சேவைகளுக்கு முன்னுரிமையளிக்கப்படல் வேண்டும். இலங்கையில் நான் கண்டது, தெற்காசியாவின் ஏனைய நாடுகளுக்கான எச்சரிக்கைக் கதையாகும். தெற்காசியா முழுவதும் கடுமையான பொருளாதார நெருக்கடி மற்றும் பணவீக்கம் என்பன சிறுவர்களின் வாழ்க்கையை மேலும் அச்சுறுத்தக் கூடிய நிலையில் உள்ளன. ஏற்கனவே, உலகின் ஐந்தில் ஒரு பகுதியான தீவிர ஏழை மற்றும் கடும் சிரமங்கள், ஏற்றத்தாழ்வுகள் சிறுவர்களின் சுகாதாரம், கற்றல் மற்றும் பாதுகாப்பில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. உலகப் பொருளாதார வீழ்ச்சியின் மோசமான விளைவுகளுக்கு எதிராக சிறுவர்களைப் பாதுகாப்பதற்கு நாம் இப்போது செயல்படவில்லையென்றால், உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட பிராந்தியத்தின் சிறுவர்கள் மேலும் வறுமையில் தள்ளப்படுவார்கள். அத்துடன், அவர்களின் உடல்நலம், ஊட்டச்சத்து, கற்றல் மற்றும் பாதுகாப்பு என்பன மேலும் பாதிப்புக்கு உள்ளாகும். தமது பொறுப்பில்லாத நெருக்கடியின் விளைவுகளை சிறுவர்கள் அனுபவிப்பதற்கு நாம் அனுமதிக்க முடியாது. அவர்களது எதிர்காலத்தை காப்பதற்கு நாம் இன்றே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள

தெரிவித்துள்ளார். இதற்கமைய முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அரசியலமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ இல்லங்கள் உள்ளிட்ட எந்தவொரு சிறப்புரிமையும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இல்லை எனவும் சரத் என். சில்வா குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் முன்னாள் ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்ற தொலைபேசி உரையாடலின் போது ஜனாதிபதி இது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

## ரஞ்சன் ராமநாயக்கவினால்

மன்னிப்பு வழங்கப்பட்டால், ஜனநாயக உரிமை கிடைத்திருக்கும். ஆனால் அரசியலமைப்பின் 34 (1) (ஈ) சரத்தின் கீழ் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஜனாதிபதியின் பொது மன்னிப்பு கிடைத்துள்ளது. இதற்கமைவாக ரஞ்சன் ராமநாயக்கவுக்கு 7 வருடகாலத்திற்கு தேர்தலில் போட்டியிடவோ அல்லது வாக்களிக்கவோ முடியாது. எனினும், தேவைப்பட்டால் ரஞ்சன் ராமநாயக்கவை தேவைபடும் சந்தர்ப்பத்தில் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கலாம் என நீதி அமைச்சர் தெரிவித்தார். இதற்கு முன்னர் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்ட போது முதலாவது நிபந்தனைக்கு அமைவாக இவ்வாறான நிபந்தனையுடன் கூடிய பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு பின்னர் பூரண பொதுமன்னிப்பு வழங்கப்பட்டதாக அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

# ஆறுமுகத்தான்குடியிருப்பு ஸ்ரீபேச்சியம்மன் ஆலயத்தின் 44ஆம் வருட உற்சவ விழா



ஆறுமுகத்தான்குடியிருப்பு ஸ்ரீ பேச்சியம்மன் ஆலயத்தின் 44ஆம் வருட உற்சவ விழா தீ மிதிப்பு சமுத்திர தீர்த்தத்துடன் சனிக்கிழமை 27.08.2022 நிறைவு பெற்றுள்ளதாக ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. இவ்வாலயத்தின் உற்சவ விழா கடந்த திங்கள்கிழமை 22.08.2022 அன்று மடையெடுப்பு திருக்கதவு திறத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து தினமும் விஷேட பூசைகள் இடம்பெற்று வந்தன. வீதி ஊர்வலம், விஷேட ஆராதனை, வீர கம்பம் வெட்டுதல், பலி சடங்கு, தீ மூட்டுதல், தீ மிதித்தல், நெல்லுக் குற்றுதல் என்பனவற்றுடன் இறுதியாக விநாயகர்பானை எழுந்தருளல், பள்ளய சடங்கு, சமுத்திர தீர்த்தம் அன்னதான நிகழ்வு என்பனவற்றுடன் இனிதே நிறைவு பெற்றதாக ஆலய பரிபாலனை சபை தெரிவித்துள்ளது. கொரோனா வைரஸ் தொற்று இருந்த காரணத்தினால் கடந்த மூன்று வருடங்களாக இவ் ஆலய உற்சவ நிகழ்வுகள் இடம்பெற்றிருக்கவில்லை என்று தெரிவிக்கும் பரிபாலன சபையின் இம்முறை பெரும் எண்ணிக்கையிலான பிரதேச அடியார்கள் கலந்து கொண்டதாகவும் கூறினர்.

# 100 நாட்கள் செயல்முனைவின் 27வது நாள் போராட்டம் வெருகலில்



**(சுமன்)**

"வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்" எனும் 100 நாட்கள் செயல்முனைவின் இருபத்தேழாம் நாள் போராட்டம் திருகோணமலை மாவட்டத்தின் வெருகல் பிரதேசத்திலுள்ள மாவடிச்சேனையில் இன்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது. இப் போராட்டமானது மாவடிச்சேனை கிராம அபிவிருத்தி சங்க கட்டிடத்திலிருந்து மட்டக்களப்பு திருமலை பிரதான வீதி ஊடாகப் பேரணியாக சென்று மாவடிச்சேனை பொது மைதானத்தினையடைந்து அங்கு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. பேரணியானது கௌரவமான அரசியல் உரிமை வேண்டும், எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நடமாடுவது எங்கள் உரிமை, பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்று கூடுவது எங்கள் உரிமை, அரசியல் கைதிகளை விடுதலை செய், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டும், படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு நீதி வேண்டும் போன்ற பல கோசங்களுடன் முன்னெடுக்கப்பட்டது. இன்றைய இப் போராட்டத்தில் வெருகல் பிரதேச மக்கள், மீனவ சங்கத்தவர்கள், விவசாய சம்மேளனத்தினர், பெண்கள், இளைஞர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது விவசாயம் மற்றும் மீன்பிடி தொழில் சார் உபகரணங்களை காட்சிப்படுத்தி தங்களுக்கான பிரச்சனைகளையும் வெளிப்படுத்தியிருந்தார்கள். மேலும், இங்கு கூடிய மக்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் சார்பிலானவர்கள் தங்களுக்கான பிரச்சனைகளை முன்நிறுத்தும் வகையில் சுடரேற்றி தங்களின் கௌரவமான அரசியல் தீர்வு கோரிய போராட்டத்தினை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய
வருடாந்த மகோற்சவம் - 2022



கல் நந்தி புல்லுண்டு
வெள்ளையரை துரத்தியடித்த
தான்தோன்றீஸ்வரர் மகிமை காண வாரீர்!
கொடியேற்றம் : 29.08.2022
தேரோட்டம் : 11.09.2022
விளம்பர அனுசரணையாளர் மு.அருட்செல்வம் (மகிழடித்தீவு)

# கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை காணவில்லை!

அரசவலைத்தளத்தில் இருந்து கல்முனை வடக்கு செயலகமும் 29 கிராம சேவையாளர் பிரிவுகளும் நீக்கப்பட்டு இருக்கிறது.

இது தமிழ் மக்கள் மத்தியில் பாரிய உணர்வலைகளை தோற்றுவித்திருக்கின்றன.

இது தொடர்பாக உணர்வுள்ள சில அரசியல்வாதிகள் வழமைபோல காட்டமான அறிக்கைகளை வெளியிட்டவண்ண மிருக்கின்றனர்.

மக்களும் வழமைபோல ஆக்ரோஷமாக கருத்துக்களை வெளியிட்டு கொதிப்பில் உள்ளனர்.

இந்நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி துணை செயலாளர் அ.நிதான்சன் ஆகியோர் வாய்திறந்துள்ளனர்.




## அரசியல்வாதிகள் காட்டம்; மக்கள் கோதிப்பு.

### கலையரசன் எம்பி.



அரச வலைத்தளத்தில் இருந்து எமது பாரம்பரிய கல்முனை வடக்கு பிரதேச செயலகம் நீக்கப்பட்டு இருப்பது தொடர்பாக எமது தமிழ் மக்கள் கொதிப்படைந்துள்ளனர் .இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களிடம் பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அம்பாறை மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் காட்டமாக தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ..

இந்த விடயம் மேலும் மேலும் கல்முனை தமிழ் மக்களுக்கு மாத்திரம் அல்ல ஒட்டுமொத்த தமிழ் மக்களின் மனங்களையும் புண்பட செய்திருக்கின்றது. மாறாக கொதிப்படையை செய்திருக்கின்றது. ஒற்றுமை பற்றி பேசிக்கொண்டு இன்னும் இன்னும் இந்த வேற்றுமை நடவடிக்கைகளை தொடர்ச்சியாக செய்து வருகின்ற அந்த கயவர்களின் செயல்பாடு நிறுத்தப்பட வேண்டும். இல்லாவிட்டால் நாங்களும் அதே பாணியிலேயே செயல்பட நிர்பந்திக்கப்படுவோம்.

நாங்கள் எவ்வளவுதான் ஒற்றுமையாக வாழ வேண்டும் ஐக்கிய மகா சமாதானமாக வாழ வேண்டும் என்று பல முயற்சிகள் எடுத்த போதிலும் தொடர்ச்சியாக சில இனவாதிகள் அதனை அலட்சியம் செய்து வருவது ஆரோக்கியமான எதிர்காலத்துக்கு வழி வகுக்காது என நினைக்கின்றேன். எனவே இந்த விடயத்தில் உரிய சம்பந்தப்பட்டவர்களோடு பேசி கடுமையான நடவடிக்கை எடுக்க இருக்கின்றேன். என்னிடம் கல்முனையை சேர்ந்த முக்கிய பிரதிநிதிகள் இது தொடர்பாக தொடர்ச்சியாக ஆத்திரத்தோடு முறையிட்டு வருகின்றார்கள் . பலர் நேரடியாக வந்து தமது கண்டனங்களை உணர்ச்சி வசப்பட்டு தெரிவிக்கின்றார்கள்.

இதனை இன்னும் இன்னும் நீங்களும் உங்கள் கட்சியும் வெறுமனே பார்த்துக் கொண்டு இருப்பது ஏன்? என ஆக்ரோஷமாக கேட்கிறார்கள்.

எனவே இதனை சாதாரணமாக நான் எடுத்துக் கொள்ள முடியாது .எனது கட்சியின் தலைவர் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் இது தொடர்பாக தெரிவித்து இருக்கின்றேன்.

விரைவில் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். என்றார்.

### தவிசாளர் ஜெயசிறில்..



கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பாக காணி பதிவகத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட காணி பதிவக உரிமை மறுக்கப்பட்டது.அதே வேளை இவ்வாரம் அரச வலைத்தளத்தில் இருந்து கல்முனை வடக்கு பிரதேச செயலக 29கிராம சேவகப் பிரிவுகளும் முழுமையாக அகற்றப்பட்டுள்ளது.எந்த அடிப்படையில் இது நியாயம் ?

இவ்வாறு காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்..

1993 ஆண்டு முதல் முழு அதிகாரத்தோடும் இயங்கி வந்த கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை வர்த்தமானி அறிவித்தல் இல்லை என கூறி துண்டாக துண்டாக கூறுபோட்டு வருகின்றார்கள்.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தி க்கு இது வரையில் வர்த்தமானி அறிவித்தல் இல்லை. ஆனால் சுயாதீனமாக இயங்குகின்றது.

ஆனால் இன்று 29கிராம சேவகர் பிரிவையும் உள்ளடக்கி செயல்படும் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் சுயாதீன தன்மையை இல்லாதொழிக்க மிகத் தீவிரமாக இனவாத அரசியல்வாதிகளும் இனவாத அமைப்புக்களும் செய்கின்றன.இதற்கு அரச அதிகாரிகளும் துணை செல்கின்றனரா?

கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பாக காணி பதிவகத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட காணி பதிவக உரிமை மறுக்கப்பட்டது. அதேவேளை இன்று அரச வலைத்தளத்தில் இருந்து கல்முனை வடக்கு பிரதேச செயலக 29கிராம சேவகப் பிரிவுகளும் முழுமையாக அகற்றப்பட்டுள்ளது.எந்த அடிப்படையில் இது நியாயம் ?

அதேவேளை ஒன்றைச் சிந்திக்க வேண்டும் உப பிரதேச செயகலமான தோப்பூர் பிரதேச செயலகத்துக்கு இலக்கமிடப்பட்டு அவை அமைச்சின் அரச வலைத்தளத்தில் காட்டப்படுகின்றது. இது அரச கட்டமைப்பில் இனவாத அரசியல் தலையீட்டின் உச்சம் என்றே சொல்ல வேண்டும். பாகுபாட்டுடன் தொடர்ந்து கல்முனை மக்கள் புறக்கணிக்கப்பட்டு நடத்தப்படுமானால் இன நல்லிணக்கம் என்ற சொல்லை தேடிச் செல்ல வேண்டி நிலை ஏற்படும். கல்முனை மக்களின் மனநிலை மிக கொதிப்படைந்துள்ளது. விரைவில் இதற்கான முடிவு ஒன்றினை பெற வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும்.

### இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வாலிப முன்னணி துணைச்செயலாளர் நிதான்சன்



கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தன் அதிகாரத்தை உபயோகிக்க முட்டுக்கட்டை இடும் நபர்கள் வடகிழக்கு இணைய இணங்குவார்கள் என்பது தமிழ்த் தேசிய கட்சிகளின் பகல் கனவே ஆகும்.

இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிப முன்னணி துணைச்செயலாளர் அ. நிதான்சன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்..

வடகிழக்கு இணைப்பு எனும் நோக்கோடு சிறுபான்மை சமூகமாக ஒன்றிணைய வேண்டும் எனவும் அதன் ஊடாக தமிழ் பேசும் சமூகம் ஒற்றுமை என்று எல்லாம் தமிழ் தலைவர்கள் பேசதவில் அடிப்பது போன்று கிழக்கில் தமிழர் அடிக்கப்பட்டு கொண்டு இருக்கின்றர்.

1993 ஆண்டு முதல் முழு அதிகாரத்தோடும் இயங்கி வந்த கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை வர்த்தமானி இல்லை என கூறி துண்டாக துண்டாக சிதைக்கின்றனர்.மூன்று தசாப்தத்திற்கு மேல் இன்று பிரதேச செயலகம் எனும் நிர்வாக அலகின் அதிகாரம் முழுமையாக இன்னொரு பிரதேச செயலகத்தின் வரம்பு மீறிய செயலால் பாதிக்கப்பட்டு வருகின்றது.காரணம் கேட்டால் பிரதேச செயலகம் எனும் வர்த்தமானி இல்லை என கூறுகின்றனர். குறிப்பாக கோறளைப்பற்று மத்திக்கு இதுவரையில் பிரதேச செயலகத்துக்கு வர்த்தமானி இல்லை ஆனால் சுயாதீனமாக இயங்குகின்றது. ஆனால் இன்று 29கிராம சேவகர் பிரிவையும் உள்ளடக்கி செயல்படும் பிரதேச செயலகத்தின் சுயாதீன தன்மையை இல்லாதொழிக்க மிகத் தீவிரமாக இனவாத அரசியல்வாதிகளும் இனவாத அமைப்புக்களும் செய்கின்றன.இதற்கு அரச அதிகாரிகளும் துணை செல்கின்றனரா?

நேற்று முன் தினம் அரச வலைத்தளத்தில் இருந்து கல்முனை வடக்கு பிரதேச செயலக 29கிராம சேவகப் பிரிவுகளும் முழுமையாக அகற்றப்பட்டுள்ளது. எந்த அடிப்படையில் இது நியாயம் ? அதேவேளை ஒன்றைச் சிந்திக்க வேண்டும் உப பிரதேச செயகலமான தோப்பூர் பிரதேச செயலகத்துக்கு இலக்கமிடப்பட்டு அவை அமைச்சின் அரச வலைத்தளத்தில் காட்டப்படுகின்றது. இது அரச கட்டமைப்பில் இனவாத அரசியல் தலையீட்டின் உச்சம் என்றே சொல்ல வேண்டும். பாகுபாட்டுடன் தொடர்ந்து கல்முனை மக்கள் புறக்கணிக்கப்பட்டு நடத்தப்படுமானால் இன நல்லிணக்கம் என்ற சொல்லை தேடிச் செல்ல வேண்டி நிலை ஏற்படும். கல்முனை மக்களின் மனநிலை மிக கொதிப்படைந்துள்ளது. விரைவில் முடிவு ஒன்றினை பெற நாம் ஒற்றுமையாக வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும்.

மேலும் இவ்வாறு இம்சை தரு நடவடிக்கைகளுக்கு இறுதி முடிவு எட்ப்படும் காலம் விரைவில் என்பதனை இனவாத அரசியல்வாதிகள் ஞாபகம் வைத்து கொள்ள வேண்டும்.தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமைக்காக மட்டுமே குரல் கொடுத்து வருகின்றது.ஆனால் இனவாதம் தலைதூக்க இனி ஒரு போதும் இடமளியோம்.



உதவிக் கல்விப்பணிப்பாளர்
வி.ரி.சகாதேவராஜா
(காரைதீவு நிருபர்)







# தங்கத்துரையின் காலமே

## திருமலை மாவட்ட தமிழ் மக்களின் பொற்காலம்..!

**திருகோணமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் அருணாசலம் தங்கத்துரை அவர்களது 25 வது ஆண்டு நினைவை முன்னிட்டு அன்னாரது திருவுருவச்சிலை திறப்பு விழாவும் நினைவு மலர் வெளியீடும் 28-08- 2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தி/மூ/ கிளிவெட்டி மகாவித்தியாலய தங்கத்துரை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.**

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக தந்தை செல்வா என போற்றப்படுகின்ற சாமுவேல் செல்வநாயகம் அவர்களின் மைந்தனும் சட்டத்தரணியுமான சந்திரகாசன் உட்பட அரசியல் பிரமுகர்களும் பொது மக்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அமரர். தங்கத்துரை வாழ்ந்த காலம் தான் திருகோணமலை மாவட்ட தமிழ் மக்களின் பொற்காலம் என்றால் அது மிகையாகாது ஏனெனில் அவர் அரசியலில் இருந்த காலப்பகுதியில் தான் தமிழ் மக்களின் பிரதேசம் அபிவிருத்தி கண்டது அத்துடன் தமிழ் மக்களுக்கான பல வேலைவாய்ப்புகளும் வழங்கப்பட்டன. மேலும் பல குடியேற்றங்கள் மூலம் பல ஏழைகளுக்கான வாழ்விடங்களும் பெற்றுக் கொடுக்கப்பட்டன. இவை பலமான அரசுக்கு எதிராக எதிர்க்கட்சியில் இருந்து சாதித்தவை என்றால் தங்கமகனின் அரசியல் சாணக்கியம் எவருக்கும் கிடையாது என்றே கூறலாம்.

இவர் இன்றும் பல ஏழைகளின் வீடுகளில் கடவுளாக வாழ்கின்றார் என்பதை அங்கு அவர்களின் சுவர்களில் புன் சிரிப்புடன் இருக்கின்ற புகைப்படம் சான்று பகிரும்.

தமிழ் மக்களின் எதிர்காலம் கல்வியிலும் விவசாயத்திலுமே தங்கியிருக்கிறது என்ற தூர நோக்குடன் செயற்பட்டு தனது அரசியல்காலங்களில் அது தொடர்பான அபிவிருத்தியில் அதிக அக்கறை செலுத்தியிருந்தார். அதன் பலனாக பல கல்விச் சாலைகள் உருப் பெற்றதோடு பல குளங்களும் புத்துயிர் பெற்றிருந்தன.

மூன்று மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற இவர் சிங்கள மக்களிடமும் நல்லதொரு உறவை பேணி வந்தார் இதனால் மக்களுக்கு பல சேவைகளை அரசிடம் இருந்து பெற்றுக் கொடுப்பதற்கு உதவியாக இருந்தது. இதன் பலனாக இஸ்லாமிய மக்களாலும் தங்கத்துரை அண்ணன் என உரிமையோடு அழைக்கப்பட்டார்.



குறிப்பாக மூதூர் இஸ்லாமிய மக்களுடன் அவர் பேணிவந்த உறவு அளப்பெரியது இதனால் மூதூர் எம்.ஏ.எம் அனஸ் என்பவர் தங்கத்துரைக் காவியம் என்ற நூலை படைத்திருந்தார் இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும்.

இன்று அரச மற்றும் தனியார் துறைகளில் உயர் பதவிகளில் இருக்கும் தமிழ் மக்களின் பெரும்பாலானோர் இவரிடம் இருந்து வேலை பெற்றுக் கொண்டவர்கள்தான். ஆனால் அவர்கள் நன்றி மறந்தவர்களாக மாறிவிட்டார்களா? என்று பல தடவைகள் எண்ணத் தோன்றுகிறது. காரணம் எம் மண்ணுக்காய், எம் மக்களுக்காய் உணர்வோடு, உண்மையாக சேவை செய்த தங்கமகன் எம்மிடமிருந்து பிரிக்கப்பட்டு 25 வருடங்கள் கடந்து விட்டன (05.07.2017) என்பது பலருக்கத் தெரியாது. ஆனால் அவர் பெயரைச் சொல்லி தங்களுக்கான அரசியல் இலாபங்களை தேடிக் கொள்பவர்களை நினைக்கும்போது அவர் முன்மாதிரியான சிறந்த அரசியல்வாதியாகவும் வாழ்ந்திருக்கின்றார் என்று பெருமை கொள்ள முடிகின்றது. எனினும் இவர்போன்ற பணியையும் அவர்கள் செய்வார்களா? என்ற ஆதங்கமும் ஏற்படுகின்றது.

அமரர். அருணாசலம் தங்கத்துரை அவர்கள் அன்று தூவிச் சென்ற நல்ல விதைகள்தான் விருட்சமாகி இன்றும் நிழலோடு நாம் சுவைக்க கனிகளையும் தந்து கொண்டிருக்கின்றது என்பதை பலன் பெறுகின்றவர்கள் அறிவார்கள்.

### வாழ்க்கை வரலாறு சுருக்கமாக

அருணாசலம் தங்கத்துரை அவர்கள் 1936ம் ஆண்டு தை மாதம் 17ம் திகதி மூதூர் - கிளிவெட்டியில் பிறந்தார்.

கல்வியை கிளிவெட்டி அ.த.க பாடசாலையிலும் (கிளிவெட்டி ம.வி) மட்டக்களப்பு வந்தாறுமூலை ம.வியிலும் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கல்லூரியிலும் கற்றார்.

நீர்ப்பாசண திணைக்களத்தில் கடமையாற்றி 1970 ல் ஓய்வு பெற்றார்

1970 ன் பின்னர் அரசியல் பிரவேசம்

1980 ல் சட்டத்தரணியானார்

1994 ம் ஆண்டு கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்று (28340) திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

மூதூர், கிளிவெட்டி எனும் கிராமத்தில் இருந்து 34 வயது இளைஞனாக இலங்கை பாராளுமன்றத்திற்கு தெரிவான அமரர் தங்கத்துரை 1970 ம் ஆண்டு தொடக்கம் 1997 ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தேர்தலில் போட்டியிட்டு இரண்டு தடவைகளும் அதிகூடிய விருப்பு வாக்குகளுடன் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

1997 ம் ஆண்டு ஆடி மாதம் 5ம் திகதி திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் கட்டட திறப்பு விழாவில் கலந்து கொண்டு விடைபெறும்போது கைக்குண்டு தாக்கதலுக்கு இலக்காகி இவ் உலகில் இருந்து விடைபெற்றார்.

இதன்போது பாடசாலை அதிபர் உட்பட ஐந்து கல்விமான்களும் தமது இன்னுயிரை தியாகம் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தனது அரசியல் காலத்தில் இன, மத, மொழி வேறுபாடுகள் இன்றி அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து மூவின மக்களினுடைய ஆதரவினையும் பெற்றிருந்தார் அதனால் இன்று வரை வாழ்த்து மக்களின் மனதில் வாழ்கின்றார்.

**( அ . அச்சுதன்)**

## பொண்டுகள்சேனை மாணவர்களுக்கு இணைந்த கரங்களின் உதவி



**(காரைதீவு நிருபர் சகா)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய அதி கஷ்ட பாடசாலையான பொண்டுகள்சேனை மாணவர்களுக்கு இணைந்த கரங்கள் அமைப்பினால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. அதி கஷ்ட பிரதேச பாடசாலையான பொண்டுகள் சேனை கணபதி வித்தியாலயம் (கிரான்) தரம் 1 தொடக்கம் தரம் 8 வரையான 57 மாணவர்களுக்கும் மற்றும் முறக்கொட்டான் சேனை இ.கி.மி வித்தியாலய தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையான 88 மாணவர்களுக்கும் இணைந்த கரங்கள் அமைப்பினால் மொத்தமாக 145 மாணவர்களுக்கு மூன்று இலட்சம் ரூபா (300000) அதிகமான மதிப்புடைய கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இக் கற்றல் உபகரணங்களை, இணைந்த கரங்களின் மாவட்ட இணைப்பாளர்களான லோ.கஜரூபன், கண்ணன், சங்கீத், டெரித்,ரிஸ்வான் ஆகியோர்களும் இணைந்து வழங்கி வைத்தனர்

மாவட்ட இணைப்பாளர்களில் ஒருவரான லோ. கஜரூபன் கூறுகையில் . எங்களுடைய இந்த இணைந்த கரங்கள் அமைப்பானது மிகவும் கஸ்டப்பட்ட கிராமத்தில் வாழ்கின்ற கல்வி கற்று வருகின்ற வறிய மாணவ செல்வங்களுக்கான கற்றல் உபகரணங்களை தொடர்ச்சியாக வழங்கி வருகின்றோம். எவ்விதமான வேறுபாடுகளும் இல்லாது சகல பின்தங்கிய நிலையிலுள்ள மாணவர்களுக்கும் இச் சேவையினை வழங்கி வருகின்றோம் .இதை எண்ணி பெருமிதம் கொள்கிறது எமது இணைந்த கரங்கள் அமைப்பு. இணைந்த கரங்கள் அமைப்பானது குறுகிய காலத்தில் இத் திட்டத்தினை ஆரம்பித்து சுமார் 4 மாத காலத்தில் 1500 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு உதவியுள்ளது . சில பாடசாலைகளின் வேண்டுதல்களுக்கு அமைவாக தரம் 5 புலமை பரீட்சை மாதிரி வினத்தாள் களையும் ,சுமார் 400 க்கு மேற்பட்ட வினாத்தாள்களையும் வழங்கியிருந்தோம். இதனை வழங்கிய புலம்பெயர் உறவுகளுக்கும் நன்கொடையாளர் களுக்கும் நன்றி என்றார்.

## கிழக்கிழங்கையில் வரலாற்றுச் சிறப்புப் பெற்றதும் சிகண்டி





**க.ருத்திரன்**

கிழக்கிழங்கையில் வரலாற்றுச் சிறப்புப் பெற்றதும் சிகண்டி முனிவரினால் பூசிக்கப்பட்ட வேலுடைய சித்தாண்டிபதி அருள்மிகு ஸ்ரீ வள்ளி குஞ்சரி சமேத ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோவிலின் வருடாந்த மகோற்சவத்தின் திருகொடியேற்ற உற்சவம் நண்பகல் 12.00 மணிக்கு ப்ரமோற்ச பிரதமகுரு சிவஸ்ரீ. கைலாசநாத வாமதேவ குருக்கள் தலைமையில் இடம்பெற்றது. கோவிலின் மகோற்வ கொடியேற்றத் திருவிழாவாகிய நேற்று காலை விநாயகப் பூசை இடம்பெற்றதும், விளக்குமண் எடுத்தல் பூசை ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோயிலுக்குச் சொந்தமான வயற்காணியில் இருந்து நவதானிங்கள் இடுவதற்கான மண் பூசைகளுடன் ஆலயத்திற்கு எடுத்துவரப்பட்டது.

பின்னர் இம்முறை முதன்முதலாக கோவில் கொடியேற்றச் கொடிச்சீலை பாரம்பரியமாக விசேட மேளதாளவாத்தியங்கள் முழங்க ஆலயத்தின் பிரதான வாயில் முச்சந்திப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து ஆலயத்தின் எஜமானராகிய வன்னியனார் தலையில் கொடிச்சீலையை வைத்து வண்ணக்குமார் உள்ளிட்ட நிருவாகம் பூடைசூழ அரோகரா கோசத்துடன் ஆலயத்திற்கு கொடிச் சீலை கொண்டுவரப்பட்டு ஆலய உள்வீதி வலம்வந்ததும் கொடியேற்ற பூசைகள் இடம்பெற்றது.

அதன்பின்னர் வசந்தமண்டபத்தில் இருந்து பிள்ளையார், வள்ளி தெய்வானையுடன் எழுந்தருளிய சண்முகப்பெருமான், தேவியுடன் எளுந்தருளிய வீரபத்திரர் கொடித்தம்பம்முன்னதாக எழுந்தருளியதும் கொடியேற்ற பூசை இடம்பெற்றது, பக்தர்களின் அரோகரா கோசத்துடன் ஸ்ரீ சித்திர வேலாயுத கோவில் கொடியேற்றம் இடம்பெற்றது. அதன்பின்னர் உள்வீதி வலம்வந்த கொடியேற்ற உற்சவமூர்த்திகள் வந்தமண்டபத்தில் எழுந்தருளியதுடன் கொடியேற்ற உற்சவத்திருவிழா இனிதே நிறைவடைந்தது. குடிப்பரம்பரை முறைத் திருவிழாக்களைக் கொண்ட 16 நாள் திருவிழாவில், 07.09.2022, 08.09.2022, 09.09.2022 ஆகிய திகதிகளில்வரும் மூன்று நாட்களும் அதிவிசேட மயில்கட்டுத் திருவிழாக்களாக இடம்பெறவுள்ளது. நேற்றைய கொடியேற்ற உற்சவத்துடன் ஆரம்பமாகி 16 நாட்கள் நடைபெற்று 16வாது நாளாகிய 10.09.2022 சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு சித்தாண்டி உதயன்மூலையில் அமைந்துள்ள சரவணப்பொய்கை பிரணவத் தீர்த்தோற்சவத்துடன் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில் வருடந்த மகோற்சவப் பெருவிழா நிறைவயைவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வீட்டுத் தோட்ட செய்கையை ஊக்குவிக்க விதை செடிகள் வழங்கி வைப்பு





**ஹஸ்பர்**

திருகோணமலை பாரதி புரத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான விவசாய ஊக்குவிப்பு தொடர்பிலான பயிர் செய்கைக்கான விதைகள்,மரக் கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன. குறித்த நிகழ்வானது கிளி மக்கள் லண்டன் அமைப்பினால் பாரதிபுரத்தில் வைத்து (27) வழங்கப்பட்டன. இவ் இலவச பயிர் செய்கைக்கான கன்றுகள் ஊடாக வீட்டுத் தோட்ட செய்கையை அதிகரித்து உணவுப் பற்றாக்குறை தீர்வுக்கான ஒரு உந்து சக்தியாக அமையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், சமூக செயற்பாட்டாளர்களான கே.பாமினி, தீபா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மருதமுனை நெசவாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஹரீஸ் எம்.பியின் ஏற்பாட்டில் ஆராய்வு

**நூருள் /ஹுதா உமர்.**

அம்பாறை மாவட்ட மருதமுனை பிரதேச நெசவாளர்கள், கைத்தறி உற்பத்தியாளர்கள் சமகாலத்தில் சந்திக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்தாராயும் கலந்துரையாடல் ஒன்று கல்முனை பிரதேச செயலக மண்டபத்தில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலியின் தலைமையில் இன்று சனிக்கிழமை (27) இடம்பெற்றது.

திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் முன்வைத்த வேண்டுகோளின் பேரில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கலந்துகொண்டு நெசவாளர்கள், கைத்தறி உற்பத்தியாளர்கள் சமகாலத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள், நூல் இறக்குமதி செய்வதில் உள்ள குளறுபடிகள், விலையேற்றத்தினாலும், அரசியல் நெருக்கடியினாலும் நெசவுத்துறை பாதிப்படைந்த விடயங்கள், எரிபொருள் தட்டுப்பாட்டினால் மூலப்பொருட்கள் பெறுவதில் உள்ள சிக்கல்கள் தொடர்பில் நெசவாளர்களிடம் கேட்டறிந்து கொண்டார். இங்கு நெசவாளர்களிடம் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் உற்பத்தி தொடர்பில் பொறிமுறை உருவாக்குவதற்கான நெறிமுறைகளை பிரதேச செயலகங்களினூடாக உருவாக்குவது, நூல் இறக்குமதிக்கு அரச மானியங்கள் கோருவது போன்றவற்றுடன் ஜனாதிபதி, அமைச்சர்கள் ஆகியோரை சந்தித்து இது தொடர்பில் பேச்சுக்கள் நடத்த தான் தயாராக உள்ளதாகவும், நெசவாளர்களின் பிரதிநிகளையும் இணைத்துக் கொண்டு உரிய துறையின் அதிகாரிகளை சந்தித்து தீர்வுக்கு வழிசமைக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் உற்பத்திகளை சந்தைப்படுத்தல், நெசவுத்துறையை மேலும் மேம்படுத்தல் போன்ற விடயங்களை இங்கு ஆராய்ந்து நெசவாளர்களுக்கு இலாபம் கிடைக்கும் படி உற்பத்தி விலையை குறைப்பது எப்படி என்று ஆராயும் படி தெரிவித்த அவர் அரச வர்த்தக கூட்டுத்தாபணம் இது விடயத்தில் எவ்வாறு பங்களிக்கும் என்பது தொடர்பில் விளக்கினார்.

உற்பத்தி பொருட்களின் விலையேற்றம் தொடர்பில் ஆராய்ந்ததுடன் வர்த்தக அமைச்சர், புடகை கைத்தொழில் அமைச்சு ஆகியவற்றினூடாக எவ்வாறான முன்னெடுப்புக்களை செய்யலாம் என்பது தொடர்பில் ஆராய்ந்ததுடன் கல்முனை மாநகர சபை முதல்வர் ஏ.எம். றக்கிப் பிரதேச நெசவுத்துறையின் பிரச்சினைகளை முன்வைத்ததுடன் அவைகளுக்கான தீர்வுகள் தொடர்பில் இங்கு கருத்து தெரிவித்தார். இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபை முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றக்கிப், மருதமுனையை பிரதிநிதித்துவப்படுத்தும் கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான எம்.எஸ். உமரலி, எம்.எஸ்.எஸ். நவாஸ், ஏ.எச்.ஏ. ழாஹிர் முன்னாள் உறுப்பினர் ஏ.எல்.எம். முஸ்தபா, பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர், பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்தியோக செயலாளர் நௌபர் ஏ பாவா, பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பு செயலாளர் எம்.ஏ. சப்ராஸ் நிலாம், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்த கொண்டனர்.








திருகோணமலை அருள்மிகு வில்லூன்றிக் கந்தசுவாமி தேவஸ்தானம் மஹோற்சவம் 16ம் நாள் தீர்த்தோற்ஸவம் மற்றும் அமாவாசை விரதம் – 26.08.2022 வெள்ளிக்கிழமை நடைபெற்ற போது சில புகைப்படங்கள் படங்கள் – வடமலை ராஜ்குமார்

## பதவி உயர்வுக்கான சான்றிதழ் வழங்கி வைப்பு



**ரவ்பீக் பாயிஸ்**

ஆசிரியர் தொழில் வாண்மை விருத்தி நிலையத்தில் தமிழ்மொழி மூல ஆசிரியர்களின் பதவி உயர்வுக்கான **EB** பரீட்சையினை நிறைவு செய்த 100 ஆசிரியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டது. குறித்த சான்றிதழ் வழங்கும் நிகழ்வு முகாமையாளர் திருமதி. சில்மியா ஆர்பீன் அவர்களது ஏற்பாட்டில் நடைபெற்றதுடன் நிகழ்வில் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. சிவானந்தம் சிறீதரன் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கிவைத்தார்.

இதன்போது வலயக்கல்விப் பணிப்பாளர் அவர்களது கண்காணிப்பில் உரிய துறைகளில் தேர்ச்சியுள்ள சிறந்த வளவாளர்களைக் கொண்டு 3(1) ஆசிரியர்களுக்கு ஏழு பிரிவுகளில் 21 நாட்கள் பயிற்சியும், 2(1) ஆசிரியர்களுக்கு ஆறு பிரிவுகளில் 18 நாட்கள் பயிற்சியும் மற்றும் பரீட்சையும் ஆசிரியர் தொழில் வாண்மை விருத்தி நிலையத்தில் நடைபெற்றிருந்தது.

குறித்த தருணம் ஆசிரியர்கள் வலயக்கல்வி அலுவலகத்தில் கடந்த 2020.08.17 அன்று வலயக்கல்விப் பணிப்பாளராக கடமையேற்ற திரு. சிவானந்தம் சிறீதரன் அவர்களது வழிகாட்டலில் இணைந்த ‘வலயக் கல்வி அபிவிருத்திக் குழுவினரின் இரு வருட பண்முகப்படுத்தப்பட்ட கல்விச் செயற்பாடுகளை நினைவு கூர்ந்து’ பாராட்டிக் கௌரவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# பிசாசுகளிடம் இருந்து சமூக உரிமைகளை பெற எங்களை நாங்கள் தியாகம் செய்தோம்



**நூருல் /ஹுதா உமர்**

காலம் எமக்கு சாதகமாக அமைந்திருக்கும் போது விதண்டாவாதம் பேசிக்கொண்டு அமைதியாக இருக்க முடியாது என்பதனால் காலத்தை கவனத்தில் கொண்டு துரிதமாக இயங்க ஆரம்பித்துள்ளோம். விமர்சனங்களுக்கு அஞ்சி கோழைத்தனமாக ஒதுங்க முடியாது. வரலாற்றில் எப்போதும் இல்லாதவகையில் ஒரு நல்ல நிலை நாட்டில் ஏற்பட்டுள்ளது. ஏப்ரல் அரகலவின் பின்னர் பெரும்பான்மை மக்கள் மத்தியில் சிறுபான்மை மக்கள் தொடர்பில் நல்லபிப்பிராயம் ஏற்பட்டுள்ளது. எனவே இந்த காலகட்டத்தில் தமிழ் முஸ்லிம் சமூகம் இந்த நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப உதவ வேண்டிய தருணமிது. அதற்காக மத்தியிலும் அதிகார பரவலாக்க முறையை உருவாக்க வேண்டும். இப்போது அமைச்சர் பதவியென்பது கணக்கில்லா நிலைக்கு வந்துவிட்டது. சமூகத்தின் அதிகாரம் ஓங்க முதல் மூன்று இடங்களுக்குள் ஒன்றில் நாம் அமர வேண்டும். அதுதான் தமிழ்– முஸ்லிம் ஆகிய இரு சமூகத்திலிருந்தும் இரு உப ஜனாதிபதி பதவிகள். இந்த நிலைப்பாட்டை தலைவர் எம்.எச்.எம். அஸ்ரப் அவர்கள் கடந்த 2000 ம் ஆண்டு அரசியலமைப்பு நகலாக பாராளுமன்றில் சமர்ப்பித்திருந்தார் என முன்னாள் இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை மாலை அட்டளைச்சேனையில் இடம்பெற்ற இளைஞர்கள் சந்திப்பில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய அவர் தொடர்ந்தும் அங்கு உரையாற்றுகையில்,

ஜனாஸாக்கள் பற்றியெரிந்த போது அந்த குடும்பங்கள் அடைந்த வலியை எமது பிரமுகர்கள் உள்ளார்ந்தமாக உணர்ந்திருக்கவில்லை. அதிலிருந்து சமூகத்தை காக்க நாங்கள் ரஸ்யாவின் புட்டினிடமோ அல்லது அமெரிக்கவின் ஜோ பைடனிடமோ தீர்வை கோர முடியாது. அன்று அதற்கான தீர்வை தரும் அதிகாரம் ஜனாதிபதியாக இருந்த கோத்தாவிடமே அன்று இருந்தது. அவர் பேயாக, பிசாசாக இருந்தாலும் கூட தீர்வு அவரிடம் தான் இருந்தது. அதனால் தான் சமூகத்தின் ஏச்சுக்களுக்கு பயந்துகொண்டு கோழைத்தனமாக ஒதுங்கியிராமல் துணிந்து எங்களை பலிகொடுத்து அந்த நாட்களை வெற்றிகொண்டோம். கடந்த காலங்களில் சமூக நலனுக்காக நல்ல கருத்துக்களை முன்வைத்த தலைவர் அஸ்ரபுக்கே முட்டை வீசிய சமூகத்திலிருந்து பாராளுமன்றம் சென்ற நாங்கள் பழிச்சொற்கள் வரும், அபாண்டங்கள் வரும், ஏச்சுப்பேச்சுக்கள் வரும் என்பதெல்லாம் தெரியாமல் அரசியல் செய்ய வில்லை. சமூகத்தின் வலியை போக்க அவர்களுடன் சென்று பேசினோம்.

அதன் பலனாக ஜனாஸா எரிப்பை நிறுத்தினார்கள், மார்க்க சட்டங்களில் கை வைப்பதிலிருந்து பின் வாங்கினார்கள், காதி நீதிமன்ற விவகாரத்தில் அவர்கள் பின் வாங்கினார்கள். அவைகளெல்லாம் சமூகத்துக்கு கிடைத்த நன்மைகளே. 20 இல் வலியுறுத்தப்பட்ட விடயம் தலைவர் அஸ்ரப் விரும்பிய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையே. மு.கா தலைமைத்துவ கோட்பாட்டை நாங்கள் மீறி செயற்பட வில்லை. மஜ்மா நகரில் 4 ஆயிரத்துக்கு அதிகமான ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது. இவைகளெல்லாம் நாங்கள் 20க்கு ஆதரவளித்ததன் மூலம் அந்த பிசாசுகளிடமிருந்து பெறப்பட்ட நன்மைகள்.

புதிய ஜனாதிபதியாக ரணில் தெரிவானவுடன் அவரிடம் எங்களின் சொந்த சலுகைகள் தொடர்பில் நாங்கள் பேச செல்லவில்லை. சமூகத்தின் முக்கிய பிரச்சினைகளுக்கான தீர்வையே முன்வைத்தோம். அதில் முக்கியமாக அமைந்த தடைசெய்யப்பட்ட முஸ்லிம் அமைப்புக்களை பற்றி எடுத்துரைத்தோம், மீனவர்கள், விவசாயிகளின் பிரச்சினைகள், காணி பிரச்சினைகள், நிர்வாக எல்லை பிரச்சினைகளை பற்றி பேசினோம். அதுபோல பல நூற்றுக்கணக்கான பிரச்சினைகளை பேசியுள்ளோம். நாங்கள் முன்வைத்த பிரச்சினைகளை தீர்த்து கொடுக்குமாறு குறித்த இலாகாக்களுக்கான அமைச்சர்களுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். அதில் இப்போது தடைசெய்யப்பட்ட முஸ்லிம் அமைப்புக்களின் தடைநீக்க நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. மீனவர்கள்– விவசாயிகளின் எரிபொருள் பிரச்சினைக்கான தீர்வு கிட்டவுள்ளது. சம்பந்தன் ஐயா அவர்கள் ஒரு காலத்தில் குறிப்பிடுவார் வடக்கு கிழக்கை இணைத்து அதில் முஸ்லிம் முதலமைச்சரை நியமிப்போம் என்று. அது அவரது எண்ணம். அது நிரந்தர தீர்வல்ல நிரந்தர தீர்வு இப்போது இருப்பது போன்று தனித்தனியாக இருப்பதே என்றார்.

# தம்பலகாமத்தில் 35 கால் நடை வளர்ப்பாளர்களுக்கு கரவை பசு மாடுகள் வழங்கி வைப்பு



**ஹஸ்பர்**

திருகோணமலை மாவட்டம்,தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட கால் நடை வளர்ப்பாளர்களுக்கான கரவைப் பசு மாடுகள் வழங்கி வைக்கப்பட்டன. தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் நேற்று (26) இந் நிகழ்வு கல்மெடியாவ வடக்கு கிராம சேவகர் பிரிவில் இடம் பெற்றது. முஸ்லிம் எயிட் நிறுவனம் ஊடாக சுமார் 35 பயனாளிகளுக்கு தலா 300000 ரூபா பெறுமதியான கரவை பசு மாடுகள் பயனாளிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டன. கரவைப் பசு மாடுகள் வளர்ப்பின் ஊடாக பாற் பண்ணை தொழில் மூலமான நாளாந்த வருமானத்தை அதிகரிக்கவும் தற்போதைய நிலையில் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து வருமானத்தை அதிகரித்த இதனை பயன்படுத்துவது சிறந்தது எனவும் இத் திட்டம் ஊடான எதிர்பார்ப்பாக காணப்படுகிறது.

இதன் போது முதலுதவி பெட்டிகளும் கால் நடை வளர்ப்பாளர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம, உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், முஸ்லிம் நிறுவனத்தின் இலங்கைக்கான வதி விடப் பிரதிநிதி ஏ.சி.பைசல்கான்,கால் நடை வைத்தியர் உட்பட பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# பாற்குடபவனியும் பாரம்பரிய கலை கலாசார ஊர்வலமும்

**வி.சுகிர்தகுமார்**

அம்பாரை மாவட்டம் அக்கரைப்பற்று மருதடி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவ பெருவிழாவின் பாற்குடபவனியும் பாரம்பரிய கலை கலாசார ஊர்வலமும் நேற்று (27) பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

இலங்கைத்திருநாட்டின் கிழக்கே தென்பால் செந்நெல்விளைகின்ற செழிப்பான வயல் நிலங்களும் சைவநெறி நின்று தமிழ் வளர்க்கும் மக்களும் வாழும் சைவப்பழம்பெரும் அழகு நிறை அக்கரைப்பற்றில் மருதடி நிழலில் வீற்றிருந்து அடியவர்கள் இன்னல் களைந்து பேரருள் மழைபொழியும் விநாயகப்பெருமானின் இவ்வருட மகோற்சவம் கடந்த 22ஆம் இடம்பெற்ற கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து இடம்பெற்ற கிரியைகளுடன் நேற்று இடம்பெற்ற பாற்குடபவனி மற்றும் சங்காபிசேக கிரியைகளுடனும் 31ஆம் திகதி இடம்பெறும் தீர்த்தோற்சவம் அன்று மாலை நடைபெறும் கொடியிறக்கல் திருவிழாவுடனும் 01ஆம் திகதி இடம்பெறும் பூங்காவனத்திருவிழா, திருப்பொன்னூஞ்சல் 02ஆம் திகதி இடம்பெறும் வைரவர் பூஜையுடன் நிறைவுறுகின்றது. ஆலையடிவேம்பு பிரதேச செயலக ஸ்ரீ மகாகணபதி ஆலயத்தில் இருந்து ஆரம்பமான பாற்குடபவனியானது சாகாம வீதியூடாக சென்று அக்கரைப்பற்று சந்தை சதுக்க மணிக்கூட்டுக்கோபுர வளைவினூடாக பொத்துவில் வீதியை அடைந்து அங்கிருந்து ஆலயத்தை சென்றடைந்தது

# ஏறாவூர் வன்முறைகள் தொடர்பாக தலைமறைவாகியிருந்த சந்தேக நபர் 3 மாதங்களின் பின்னர் சரணடைவு

ஏறாவூர் வன்முறைகள் தொடர்பாக தலைமறைவாகியிருந்த பிரதமான சந்தேக நபர் 3 மாதங்களின் பின்னர் சரணடைவு செப்ரெம்பெர் 9 வரை விளக்கமறியல். மட்டக்களப்பு ஏறாவூரில் கடந்த மே 9ஆம் திகதி இரவு இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த நிலையில் தலைமறைவாகியிருந்த பிரதான சந்தேக நபர் வெள்ளிக்கிழமை 26.08.2022 ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளார். சந்தேக நபரான அப்துல் மஜீட் பிர்தௌஸ் சரணடைந்ததைத் தொடர்ந்து சந்தேக நபரை செப்ரெம்பெர் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்ற நீதிவான் அன்வர் சதாத் உத்தரவிட்டார். சந்தேக நபர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணிகளான ஹபீப் முஹம்மது றிபான், அச்சலா செனவிரெட்ண ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினரும் சுற்றாடல் அமைச்சருமான நஸீர் அஹமட்டின் வாடகைக் காரியாலயம், அவரது உறவினரின் வீடு, ஹோட்டல்களுக்கு தீயிட்டுக் கொளுத்தியமை கொள்ளையயடித்தமை அத்துடன் 3 ஆடைத்தொழிற்சாலைகளை சேதப்படுத்தியமை தொடர்பாக, மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினரால் ஏற்கெனவே 38 பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வந்த நிலையில் பிரதான சந்தேக நபர் தற்சமயம் கைது செய்யப்பட்டுள்ளார்.


# ஏறாவூர் வன்முறைகள் தொடர்பாக தலைமறைவாகியிருந்த சந்தேக நபர் 3 மாதங்களின் பின்னர் சரணடைவு

ஏறாவூர் வன்முறைகள் தொடர்பாக தலைமறைவாகியிருந்த பிரதமான சந்தேக நபர் 3 மாதங்களின் பின்னர் சரணடைவு செப்ரெம்பெர் 9 வரை விளக்கமறியல். மட்டக்களப்பு ஏறாவூரில் கடந்த மே 9ஆம் திகதி இரவு இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த நிலையில் தலைமறைவாகியிருந்த பிரதான சந்தேக நபர் வெள்ளிக்கிழமை 26.08.2022 ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளார். சந்தேக நபரான அப்துல் மஜீட் பிர்தௌஸ் சரணடைந்ததைத் தொடர்ந்து சந்தேக நபரை செப்ரெம்பெர் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்ற நீதிவான் அன்வர் சதாத் உத்தரவிட்டார். சந்தேக நபர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணிகளான ஹபீப் முஹம்மது றிபான், அச்சலா செனவிரெட்ண ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினரும் சுற்றாடல் அமைச்சருமான நஸீர் அஹமட்டின் வாடகைக் காரியாலயம், அவரது உறவினரின் வீடு, ஹோட்டல்களுக்கு தீயிட்டுக் கொளுத்தியமை கொள்ளையயடித்தமை அத்துடன் 3 ஆடைத்தொழிற்சாலைகளை சேதப்படுத்தியமை தொடர்பாக, மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினரால் ஏற்கெனவே 38 பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வந்த நிலையில் பிரதான சந்தேக நபர் தற்சமயம் கைது செய்யப்பட்டுள்ளார்.


# ஆலையடிவேம்பில்சமுர்த்தி பயனாளிகளின் வருமானத்தை அதிகரிக்கும் வேலைத்திட்டம்



**வி.சுகிர்தகுமார்**

வருமானம் குறைந்த மக்களின் வாழ்வாதரத்தை உயர்த்தும் நோக்கில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. இதற்கமைவாக ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் கோழிக்குஞ்சுகள் வழங்கி அதன் மூலம் சமுர்த்தி பயனாளிகளின் வருமானத்தை அதிகரிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரனின் வழிகாட்டலில் சமுர்த்தி தலைமையக முகாமையாளர் என்.கிருபாரனின் மேற்பார்வையில் இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக பிரதேச செயலகத்தின் கருத்திட்ட முகாமையாளர் க.சத்தியப்பிரியன் தலைமையில் நேற்று (26) இடம்பெற்ற கோழிக்குஞ்சுகள் வழங்கும் நிகழ்வில் உதவிப்பிரதேச செயலாளர் ஆர். சுபாகர் மற்றும் சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் திருமதி சிவப்பிரியா சுதாகரன் ஆகியோர் கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு 660 கோழிக்குஞ்சுகளை வழங்கி வைத்தனர்.

# காணி அபகரிப்பில் இழந்தவர்கள் சரியான ஆவணங்களை கொண்டிருந்தால் நீதியை பெற்றுக்கொள்ள முடியும்



**(வாஸ் கூஞ்ஞ)**

வட மாகாணத்தில் பல கோணங்களில் காணிகள் அபகரிக்கப்பட்டிருப்பது உங்களால் தெரிவிக்கப்படடிருக்கின்றபோதும் தனியார் காணிகளாக இருந்து இவற்றிற்கான ஆவணங்கள் உங்களிடம் இருக்குமாகில் நாம் வழக்கு தாக்கல் செய்து நீதியை பெற்றுக்கொள்ள முடியும் என மன்னாரில் சிறந்து விளங்கும் சட்டத்தரனி திருமதி எஸ்.புராதினி இவ்வாறு தெரிவித்தார். 'மெசிடோ' நிறுவனத்தினால் அதாவது சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனமானது 'வட மாகாண காணி அபகரிக்கப்பட்ட குரல்' என்ற தொணிப் பொருளில் மன்னாரில் இவ் நிறுவனத்தின் தலைவர் யட்சன் பிகிராடோ தலைமையில் வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலிருந்தும் காணி பிரச்சனைகளுக்கு உள்ளாகியுள்ள தலா பத்து பேர் தெரிவு செய்யப்பட்டு இவர்களுக்கான கருத்தமர்வு செவ்வாய்கிழமை (23.08.2022) இடம்பெற்றது.

இவ் கருத்தமர்வில் வளவாளராக கலந்து கொண்ட மன்னாரில் சிறந்து விளங்கும் சட்டத்தரனி திருமதி எஸ்.புராதினி தெரிவிக்கையில், இலங்கையின் வட மாகாணத்தில் பல்வேறு மாவட்டங்களிலிருந்து உங்கள் காணி பிரச்சனை தொடர்பாக கலந்தாலோசிப்பதற்கு வந்திருக்கும் நீங்கள் அந்த அடிப்படையில் உண்மையில் யாவரும் பாதிப்படைந்தவர்கள் என்ற அடிப்படையில் நீங்கள் இங்கு தெரிவித்த கருத்துக்கள் அமைந்துள்ளன. உங்கள் பிரச்சனைகளை நாங்கள் எவ்வாறு தீர்ப்பது என்று நோக்கும்போது அரசாங்கத்தால் அபகரிக்கப்பட்ட காணிகள் அதாவது பாதுகாப்பு படைகளால் அபகரிக்கப்பட்டுள்ளது.

தனியார் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளது. இத்துடன் வன விலங்கு பாதுகாப்பு பகுதினராலும் தொல்பொருள் பாதுகாப்பு பிரிவினராலும் இவ்வாறு உங்கள் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளது என்பது உங்கள் கருத்துக்களிலிருந்து வெளி கொணரப்பட்டுள்ளது. பாதுகாப்பு நடவடிக்கையின் காரணமாக காணிகள் அபகரிக்கப்பட்டிருந்தாலும் ஆவணங்களை வைத்திருக்கும் உங்கள் தனியார் காணிகளை எவ்வாறு நாம் தீர்க்க வேண்டும் என்பது நாம் முடிவு எடுப்பதில் கட்டாயத்தின் நிமித்தம் இருக்கின்றோம்.

உங்கள் 'மெசிடோ' நிறுவனத்தினூடாக நாங்கள் முடிந்த அளவு இது தொடர்பாக நாம் நடவடிக்கையை முன்னெடுப்போம். இது எவ்வாறு அமையுமென்றால் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் வருகை தந்திருப்பவர்களிலிருந்து தலா ஒரு பிரதிநிதியை தெரிந்தெடுத்து இவர்கள் மூலமாக உங்கள் மாவட்டங்களில் எவ்வாறானா பிரச்சனைகள் காணப்படுகின்றன என்பதை ஒரு சமரியாக எங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அதன் பிற்பாடு இதன் பிரச்சனைகளை எந்த வழியில் தீர்க்க முடியும் என நாங்கள் ஆய்வு செய்து அதன் பின் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். அத்துடன் தனியார் காணிகளாக இருந்து இவற்றிற்கான ஆவணங்கள் உங்களிடம் இருக்குமாகில் நாம் வழக்கு தாக்கல் செய்து நீதியை பெற்றுக்கொள்ள முடியும். இராணுவம் அபகரித்து வைத்திருக்கும் காணிகளை மீட்பது மிகவும் இலகுவான விடயம் அல்ல. இருந்தும் இது தொடர்பாக நாம் முயற்சிகளை மேற்கொள்ள முடியும் எனவும் இவ்வாறு தெரிவித்தார்.

# கால் புதையும் மண்ணில்

# சிற்கள் புதைந்து செல்லும்

# தேரோட்டம்

## 2022.09.11

## காண வாரீர்!

## கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம்



"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206

## சட்ட விரோதமாக கரையோரத்தை கையகப்படுத்தியோர் மீது நடவடிக்கை

**ஹஸ்பர்**

கிண்ணியா பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட காக்காமுனை மற்றும் அதனை அன்டிய பிரதேசங்களில் நேற்றைய (26) தினம் திருகோணமலை கரையோரப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் கிண்ணியா பொலிசார் இனைந்து சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டனர் இதன் போது சட்டவிரோதமான முறையில் அனுமதி இன்றி அத்துமீறி ஆக்கிரமிக்கப்பட்ட கரையோர மற்றும் களப்பு பகுதிகள் அடையாளம் காணப்பட்டு உறிய நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக கரையோர பாதுகாப்புதிணைக்களத்தின்பிராந்திய பொருப்பதிகாரி கமகே தெரிவித்தார் இந்த நடவடிக்கையில் கிண்ணியா பிரதேச செயலக கரையோர பாதுகாப்பு உத்தியோகத்தர் சனீஸ் உற்பட கிண்ணியா பொலிசாரும் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

# நாவல் முயற்சிகள் ஊக்குவிக்கப்பட வேண்டியது அவசியம்

**(அ . அச்சுதன்)**

கதிர். திருச்செல்வம் எழுதிய உயிரோடு நானாக நாவல் நூல் வெளியீட்டு விழா 24-08-2022 புதன்கிழமை திருகோணமலை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி மண்டபத்தில் கவிஞர். தில்லைநாதன் பவித்ரன் அவர்களின் தலைமையில் இடம் பெற்றது நிகழ்வில் அரசியல் ஆய்வாளர் ஆ . யதீந்திரா நூல் ஆய்வுரை செய்தார் . அவர் அங்கு உரையாற்றும் போது...

கதிர் திருச்செல்வத்தின் 'உயிரோடு நானாக' – என்னும் நாவல் வெளியீடு. பெருந்தொற்றிற்கு பின்னரான நீண்ட இடைவெளிக்கு பின்னர் திருகோணமலையில் ஒரு கூட்டத்தில் பேசமுடிந்தது.

இலக்கியத்துடனான தொடர்பாடல் அறுந்துபோய் வெகுநாட்களாகின்றது. எனினும் இந்த நாவல் அரசியல் உள்ளடக்கம் கொண்டதாக இருந்ததால், பேசுவதற்கு உடன்பட்டிருந்தேன். நாவலாசிரியர், ஈரோஸ் அமைப்புடன் இணைந்து செயற்பட்ட தனது அனுபவங்களை, திருகோணமலையின் கிராமிய வாழ்வோடு பிணைத்து, ஒரு புனைவை செய்திருக்கின்றார். திருகோணமலையில் நாவல் முயற்சிகள் அரிதிலும் அரிது. அந்த வகையில் நாவல் முயற்சிகள் ஊக்குவிக்கப்பட வேண்டியது.

நாவலின் பிரதான கதைக்களமான தம்பலகாமம் எனக்கும் சொந்த ஊராகும். ஈரோஸ் இயக்கம் தொடர்பில் பேச வேண்டியேற்பட்டதால் சில பழைய நினைவுகளை மீட்டுப் பார்க்க முடிந்தது.

ஈரோஸ் இயக்கத்திற்கும் ஏனைய இயக்கங்களான புளொட், டெலோ மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய இயக்கங்களுக்குமிடையில் ஒரு வேறுபாடுண்டு. அதாவது, ஈரோஸ், அதன் தலைவர் பாலகுமாரனால், 1990களில் கலைக்கப்பட்டது. பெருமளவான உறுப்பினர்களுடன் பாலகுமாரன் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இணைந்து கொண்டார். ஏனைய இயங்கங்கள் தடைசெய்யப்பட்ட பின்னணியில் மாற்றுத் தெரிவின்றி, பாலகுமாரன் இந்த முடிவை எடுத்ததாக சொல்வோர் உண்டு. அவ்வாறில்லை விடுதலைப் புலிகள் மட்டுமே போராட்டத்தை முன்கொண்டு செல்லும் வல்லமையுள்ளவர்கள் என்பதால் பாலகுமாரன் இவ்வாறான முடிவை எடுத்ததாக கூறுவோர் உண்டு. எது உண்மை? ஈரோஸ் அமைப்பானது, மார்க்சியத்தை ஒரு இயக்க சிந்தாந்தமாக வரித்துக்கொண்டிருந்த ஆயுத இயக்கமாகும். அதே போன்றுதான் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் போன்றவையும். ஆனால் விடுதலைப் புலிகள் அப்படியல்ல. பின்னர் எவ்வாறு பாலகுமாரனால் விடுதலைப் புலிகளுடன் இணைந்து கொள்ள முடிந்தது என்னும் கேள்வியும் எழத்தான் செய்கின்றது. இதெல்லாம் முடிந்துபோன கதைதான்– எனினும், வரலாற்று சம்பவங்களை நினைத்துக்கொள்ள நேரிடும் போது, இது போன்ற கேள்விகள் எழுவதை தவிர்க்க முடிவதில்லை. பாலகுமாரனை, சமாதான உடன்பாட்டு காலத்தில், இரண்டு தடவைகள் நான் சந்தித்திருக்கின்றேன். ஒரு முறை கிளிநொச்சியில். பின்னர் மானிடத்தின் தமிழ் கூடல் நிகழ்விற்காக அவர் திருகோணமலை வந்தபோது. பாலகுமாரன் நிரம்ப படித்த – படிக்கும் ஒருவர் என்னும் புரிதலுடன்தான் அவரை சந்தித்திருந்தேன். அவரது கட்டுரைகள் பலவற்றை படித்திருக்கின்றேன். ஆழமாக விடயங்களை விவாதிக்கக் கூடியவர். அப்படிப்பட்டவர் – அமெரிக்கா வந்தாலும் எங்கட பொடியள் அடிபாடுவங்கள் என்பதை சர்வதேசம் புரிந்திருக்கின்றது என்றார். அப்போது அதன் தார்ப்பரியம் எனக்கு புரியவில்லை. ஆனால் சர்வதேச அரசியலில் ஒரு மாணவனான போது, பாலகுமாரன் விடயங்களை ஆழமாக அறிந்தவர் என்பதை ஏற்க மனம் மறுத்தது. ஈரோஸ் என்றவுடன் முதலில் ஞாபகத்திற்கு வருபவர் லங்காராணி அருளர். திருகோணமலை வந்தால் என்னை தொடர்பு கொள்வார். பின்னர் இரவுச் சந்திப்பு. அவர் எழுதிய பணச் சுரண்டல் (ஆழநெவயசல நுஒிடழவையவழைெ) என்னும் நூல் திருகோணமலை நகரசபை மண்டபத்தில் வெளியிடப்பட்ட போதுதான். முதல் முதலாக அவரை சந்திந்தேன். தன்னை அதிகம் முன்னிலைப்படுத்தியே பேசுவார். அந்த நூல் வெளியீட்டுரையில் கூட, நூறு வருடங்களுக்கு பின்னர் மூலதனம் போன்று, இது நினைவுகொள்ளப்படும் என்றார். என்னுடனான சந்திப்புக்களின் போது, பிரபாகரன் செய்த பெரிய தவறு – தன்னை அருகில் வைத்துக் கொள்ளாமைதான் என்பார். இது பற்றி எழுதியுமிருக்கின்றார். அவரது கருத்துக்களில் உடன்படாத போதிலும், அவர் மீது எனக்கு மதிப்புண்டு. ஏனெனில் அவர் ஒரு புத்திஜீவி. அதே போன்றுதான் பாலகுமாரனும் ஒரு புத்திஜீவி. நான் டான் தொலைக்காட்சியில் அரசியல் களம் – நேர்காணல் நிகழ்வொன்றை செய்துகொண்டிருந்த போது, அருளரையும் அழைத்து ஒரு முறை நேர்காணல் செய்திருக்கின்றேன் உண்மையில் அருளர் போன்றவர்கள் முற்றிலுமாக சமூகத்திலிருந்து அன்னியப்பட்டிருந்தனர். இது பலருக்கும் நடந்த ஒன்றுதான். எல்லோருக்கும் அவர்களது இயக்க அடையாளத்தோடு கட்சியிருக்கின்றது. ஆனால் ஈரோசுக்கு இல்லையே! இப்படியொரு ஏக்கம், அந்த அமைப்பில் பயணித்தவர்களிடம் இருப்பது போல் தெரிகின்றது. ஆனாலும் மனது கனக்கும் விடயம். எத்தனையோ ஆற்றலாளர்களை தமிழர் இயக்கங்கள் உட்கொண்டிருந்தது. ஆனால் எவராலும் வெற்றிபெற முடியவில்லையே ஏன்? அனைத்து இயக்க ஆளுமைகளின் ஆற்றலுக்கும் என்னதான் நடந்தது? இறுதியில் அனைவருமாக, தாயக மக்களை நடுவீதியிலல்லவா விட்டிருக்கின்றனர். என்றார்.

# சித்தாண்டிபதி சித்திர வேலாயுத சுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம்




**தீபன்**

கிழக்கிழங்கையில் வரலாற்றுச் சிறப்புப் பெற்றதும் சிகண்டி முனிவரினால் பூசிக்கப்பட்ட வேலுடைய சித்தாண்டிபதி அருள்மிகு ஸ்ரீ வள்ளி குஞ்சரி சமேத ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோவிலின் வருடாந்த மகோற்சவத்தின் திருகொடியேற்ற உற்சவம் நண்பகல் 12.00 மணிக்கு ப்ரமோற்ச பிரதமகுரு சிவஸ்ரீ.கைலாசநாத வாமதேவ குருக்கள் தலைமையில் இடம்பெற்றது. கோவிலின் மகோற்வ கொடியேற்றத் திருவிழாவாகிய இன்று காலை விநாயகப் பூசை இடம்பெற்றதும், விளக்குமண் எடுத்தல் பூசை ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோயிலுக்குச் சொந்தமான வயற்காணியில் இருந்து நவதானிங்கள் இடுவதற்கான மண் பூசைகளுடன் ஆலயத்திற்கு எடுத்துவரப்பட்டது.

பின்னர் இம்முறை முதன்முதலாக கோவில் கொடியேற்றச் கொடிச்சீலை பாரம்பரியமாக விசேட மேளதாளவாத்தியங்கள் முழங்க ஆலயத்தின் பிரதான வாயில் முச்சந்திப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து ஆலயத்தின் எஜமானராகிய வன்னியனார் தலையில் கொடிச்சீலையை வைத்து வண்ணக்குமார் உள்ளிட்ட நிருவாகம் பூடைசூழ அரோகரா கோசத்துடன் ஆலயத்திற்கு கொடிச் சீலை கொண்டுவரப்பட்டு ஆலய உள்வீதி வலம்வந்ததும் கொடியேற்ற பூசைகள் இடம்பெற்றது. அதன்பின்னர் வசந்தமண்டபத்தில் இருந்து பிள்ளையார், வள்ளி தெய்வானையுடன் எழுந்தருளிய சண்முகப்பெருமான், தேவியுடன் எளுந்தருளிய வீரபத்திரர் கொடித்தம்பம்முன்னதாக எழுந்தருளியதும் கொடியேற்ற பூசை இடம்பெற்றது, பக்தர்களின் அரோகரா கோசத்துடன் ஸ்ரீ சித்திர வேலாயுத கோவில் கொடியேற்றம் இடம்பெற்றது. அதன்பின்னர் உள்வீதி வலம்வந்த கொடியேற்ற உற்சவமூர்த்திகள் வந்தமண்டபத்தில் எழுந்தருளியதுடன் கொடியேற்ற உற்சவத்திருவிழா இனிதே நிறைவடைந்தது. கொடியேற்ற உற்சவத்துக்கு பெருமளவான பக்தர்கள் கலந்துகொண்டிருந்தனர் குடிப்பரம்பரை முறைத் திருவிழாக்களைக் கொண்ட 16 நாள் திருவிழாவில், 07.09.2022, 08.09.2022, 09.09.2022 ஆகிய திகதிகளில்வரும் மூன்று நாட்களும் அதிவிசேட மயில்கட்டுத் திருவிழாக்களாக இடம்பெறவுள்ளது. இன்றைய கொடியேற்ற உற்சவத்துடன் ஆரம்பமாகி 16 நாட்கள் நடைபெற்று 16வாது நாளாகிய 10.09.2022 சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு சித்தாண்டி உதயன்மூலையில் அமைந்துள்ள சரவணப்பொய்கை பிரணவத் தீர்த்தோற்சவத்துடன் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில் வருடந்த மகோற்சவப் பெருவிழா நிறைவயைவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கட்டுவன்-மயிலிட்டி வீதியின்
## விடுவிக்கப்படாத 480மீற்றர் வீதி விடுவிப்பு



**த.சுபேசன்**

யாழ்ப்பாணம் கட்டுவன்–மயிலிட்டி வீதியின் இதுவரை காலமும் விடுவிக்கப்படாது இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த 480மீற்றர் நீளமான வீதி 28ஃ08 இராணுவ தளபதி விக்கும் லியனகேயின் யாழ் வருகையின் போது திறந்து வைக்கப்பட்டுள்ளது. குறித்த வீதியை திறக்க வேண்டியதன் அவசியம் தொடர்பாக யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கடந்த வருட இறுதியில் கொழும்பில் இடம்பெற்ற பாதுகாப்பு ஆலோசனைக் கூட்டத்தின் போது அப்போதைய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவிற்கு விளக்கியிருந்தார்.

அதன்போது கோட்டபய ராஜபக்ச குறித்த விடயம் தொடர்பாக உடனடியாக ஆராயுமாறு அப்போதைய இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவிற்கு பணிப்புரை விடுத்திருந்தார். அதன் தொடர் நடவடிக்கையாக இராணுவ பொறியியல் பிரிவின் ஆலோசனைப்படி–தேசிய பாதுகாப்பிற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் குறித்த வீதியின் கிழக்கு பகுதியில் இருந்த இராணுவ உயர்பாதுகாப்பு வேலிகள் பின்நகர்த்தப்பட்டு,

வீதி அமைப்புப் பணிக்காக குறித்த வீதி வீதி அபிவிருத்தி அதிகாரசபையினரிடம் கையளிக்கப்பட்டு வீதி முழுமையாக செப்பனிடப்பட்டுள்ள நிலையில் கட்டுவன்–மயிலிட்டி பிரதான வீதியுடன் இணைக்கப்பட்டுள்ளது. குறித்த வீதி விடுவிப்புக் காரணமாக யாழ்ப்பாணம் விமான நிலையத்திற்கான பயணம் இலகுபடுத்தப்பட்டிருப்பதுடன்–பொதுமக்கள் வைத்தியசாலை,பாடசாலை உள்ளிட்ட இடங்களுக்கு இலகுவாக செல்வதற்கும் வழிவகை ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைப்பு



**நூருல் /ஹுதா உமர்**

அம்பாறை மாவட்ட அக்கரைப்பற்று பிரதேசத்தில் உள்ள அக்கரைப்பற்று விளையாட்டுக்கழகம், ஸ் சிட்டி விளையாட்டுக் கழகம், மயாஸ் விளையாட்டு கழகம் ஆகிய கழகங்களுக்கு திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம் ஹரிஸின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் உதைப்பந்தாட்ட காலணிகள், பந்துகள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று (26) வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர் ஏ.எல். றமீஸ் தலைமையில் இடம்பெற்றது. அம்பாறை மாவட்ட கால்பந்து விளையாட்டு துறையை மேம்படுத்த முன்னெடுக்கப்பட்டு பல்வேறு பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கு வழங்கப்பட்டு வரும் தொடர் வேலைத்திட்டத்தின் தொடர்ச்சியாக திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரிஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பாதணிகளை வழங்கி வைத்தார்.

மேலும் இந்நிகழ்வில் அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினரும், கிழக்கின் கேடயம் பிரதானியுமான எஸ். எம். சபீஸ், அம்பாறை மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஏ. முபாரக் அலி, அக்கரைப்பற்று இளைஞர் சேவை அதிகாரி எம்.எம். ஷமீலுள் இலாஹி, பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்தியோக செயலாளர் நௌபர் ஏ பாவா, விளையாட்டுக்கழகங்களின்நிர்வாகிகள், பிராந்திய சிரேஸ்ட ஊடகவியலாளர்கள், விளையாட்டு வீரர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். இதனை தொடர்ந்து அட்டாளைச்சேனை பிரதேச சூப்பர் சொனிக் விளையாட்டு கழகம், எவர் டொப் விளையாட்டு கழகம், லக்கி விளையாட்டு கழகம், ஹைலண்ட் விளையாட்டு கழகம் ஆகிய கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்களும், காலணிகளும் அட்டாளைச்சேனையில் வைத்து பாராளுமன்ற உறுப்பினரின் ஆலோசகர் ஏ.ஜி.எம். அன்வர் நௌசாத் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் அடங்களாக பலரும் கலந்து கொண்டனர்.

# உள்ளூர் உற்பத்திகளுக்கான சந்தைப்படுத்தல் வாய்ப்பினை பிரதேச செயலகங்கள் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்



**த.சுபேசன்**

யாழ் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற உள்ளூர் உற்பத்திகளுக்கான சந்தைப்படுத்தல் வாய்ப்பினை பிரதேச செயலகங்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார். அண்மையில் தென்மராட்சி–மட்டுவில் பகுதியில் சௌபாக்கியா திட்டத்தின் கீழ் தேங்காய் எண்ணெய் உற்பத்திக் கிராமத்தினை திறந்து வைத்த போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்

உள்ளூர் உற்பத்திகளை அதிகரித்து அதனூடாக கிராமிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கில் சௌபாக்கியா உற்பத்திக் கிராமங்கள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் யாழ் மாவட்டத்தில் பனைசார் உற்பத்தி,பால் உற்பத்தி,தேங்காய் எண்ணெய் உற்பத்தி என 16உற்பத்திக் கிராமங்கள் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளன. குறித்த உற்பத்திக் கிராமங்கள் ஊடாக உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகளுக்கான சந்தைப்படுத்தல் வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டிய பொறுப்பு பிரதேச செயலகங்களுக்கு உண்டு.குறித்த செயற்திட்டம் பிரதேச செயலகங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.எனவே பிரதேச செயலகங்கள் உள்ளூர் உற்பத்திகளுக்கான சந்தைப்படுத்தல் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்து உற்பத்திக் கிராம தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த வேண்டும். எதிர்காலத்தில் குறித்த உற்பத்திக் கிராமங்கள் ஊடாக கிராமத்தில் வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும். என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் தமிழ்மொழித்தினம்




மட்டக்களப்பு மேற் கல்வி வலய தமிழ்மொழித்தினபோட்டியும், இறுதி நிகழ்வும் நேற்று(26) வெள்ளிக்கிழமை கன்னன்குடா மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இதன்போது முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் உருவப்படத்திற்கு சுடேர் ஏற்றி, மலர்மாலை அணிவித்து, மலர் தூபி வணக்கம் செலுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. வலயக்கல்விப் பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம் தலைமையில் நடைபெற்ற இறுதி நிகழ்வில், வலயமட்ட போட்டியில் முதலிடங்களைப் பெற்ற குழுப்போட்டி நிகழ்வுகள் ஆற்றுகை செய்யப்பட்டன. இதன்போது, போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. மேலும் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட கோட்டத்தரப்படுத்தலில் மண்முனை தென்மேற்கு கோட்டம், அதிகூடிய புள்ளிகளைப்பெற்று இரண்டாம் இடத்தினையும், மண்முனை மேற்கு கோட்டம் இரண்டாம் இடத்தினையும், ஏறாவூர் கோட்டம் மூன்றாம் இடத்தினையும் பெற்றிருந்தன. இதற்கான வெற்றிக்கிண்ணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் கோ.குகன், ஓய்வுபெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர் ரஞ்சிதமலர் கருணாநிதி, பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட கல்விசார் உத்தியோகத்தர்கள், மாணவர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இந்துக்கலைக்கூடமும் அருங்காட்சியகமும் திறப்புவிழா





கிழக்குப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறையின் ஏற்பாட்டில் உருவாக்கப்பட்ட இந்துக் கலைக்கூடமும், அருங்காட்சியகமும், சுபஹிருது வருடம் ஆடி மாதம் 25ஆம் நாள் உத்தராட நட்சத்திரமும் திரயோதசி திதியும் விருட்சிக லக்கினமும் கூடிய சுப மங்கல வேளையில் (கடந்த 10.08.2022 புதன்கிழமையன்று) பிற்பகல் 2.00 மணியளவில் கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் வாழ்நாள் பேராசிரியர்.சி.பத்மநாதன் அவர்களும், அவரோடு கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மா.செல்வராஜா அவர்களும், முன்னிலை வகித்திருந்தார்கள். இந்நிகழ்விற்கு கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர்.வ.கனகசிங்கம் அவர்கள் தலைமை வகித்ததுடன் இந்துநாகரிகத்துறையின் துறைத் தலைவர் கலாநிதி வ.குணபாலசிங்கம் அவர்கள் துணைத் தலைமையேற்றிருந்தார்.விஷேட அதிதியாக மட்டக்களப்பு மாவட்டத்தின் அரசாங்க அதிபர் திரு.க.கருணாகரன் அவர்கள் கலந்து சிறப்பித்தார். சிறப்பு அதிதியாக கலை கலாசாரபீடத்தின் பதில் பீடாதிபதி பேராசிரியர்.சி.சந்திரசேகரம் அவர்கள் கலந்துகொண்டார். கௌரவ அதிதியாக போரதீவுப் பற்று பிரதேச செயலாளர் செல்வி.ஆர்.இராகுலநாயகி அவர்கள் பங்கேற்றிருந்தார். மேலும் இந் நிகழ்விற்கான அழைப்பு அதிதிகளாக கலை கலாசார பீடத்தின் முன்னாள் பீடாதிபதிகள் கலாநிதி.யுவராஜா தங்கராஜா, பேராசிரியை அம்மன்கிளி முருகதாஸ், கலாநிதி (செல்வி). சி.பொன்னையா, கலாநிதி.க.இராஜேந்திரம், ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தார்கள். கிழக்குப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு 42 ஆண்டுகள் ஆகின்ற நிலையில் இப்பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் இந்து நாகரிகத்துறையானது வரலாற்றுச் சிறப்புமிக்க இந்துக் கலைக்கூடத்தையும், அருங்காட்சியகத்தையும் திறந்து வைத்து பெருமிதம் கொள்கின்றது. இவ் அருங்காட்சியகம் திறந்து வைக்கப்பட்டதன் முக்கிய நோக்கம் தமிழர் பாரம்பரியத்தையும் இந்துப் பண்பாட்டு மரபையும் பிரதிபலித்துக்காட்டும் அரும்பொருட்களைப் பேணிக் காத்தலும், அதனை எதிர்கால சந்ததிக்கு கையளித்தலும் ஆகும்.நலன் விரும்பிகள், நாடளாவிய ரீதியில் ஆங்காங்கே மறைந்தும், சிதைந்தும் காணப்படுகின்ற தமிழர்களின் சமயப் பண்பாட்டுச் சின்னங்களை இவ் அருங்காட்சியகத்தில் ஒப்படைப்பதன் வாயிலாக தமிழர்களின் பண்பாட்டிருப்பிற்கு துணைசெய்ய முடியும் என்பதனை இவ் அருங்காட்சியக ஏற்பாட்டாளரும், இந்துநாகரிகத் துறைத் தலைவருமான கலாநிதி. வ.குணபாலசிங்கம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.







